(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/79) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். நிதி ஒதுக்கல் மசோதாவிலே 1,236 கோடியே 64 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பெருந்தொகையின் பெரும்பாலான பணம் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காக செலவழிக்கப்படுவதாக இல்லை. பொதுவாக நம்முடைய பொருளாதார அமைப்பு அப்படி இருக்கிறது. ஆகவே பெரும்பாலான பணம் பொருளாதார வளர்ச்சிக்கு செலவழிக்கப்படக்கூடிய ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்தி இருந்தோமென்றால் இப்போது ஏற்படுத்துவோமானால் நிச்சயம ஒரு நல்ல வளர்ச்சியைத் தமிழகத்திலே இந்தத் தொகையை வைத்து இந்த ஆண்டு ஏற்படுத்த முடியும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதே